# தேவன் இருக்கின்றார்

*சிந்திக்கும் திறனுள்ள மனிதர்களில் பெரும்பாலானோர் தேவன் இருக்கின்றாரா என்ற கேள்வியை காலங்கள் தோறும் மறுபடி மறுபடி கவனிக்கின்றனர். அவர்கள் அதில் சந்தேகப்பட வில்லையென்றாலும் கூட, மேலானவர் ஒருவர் இருக்கின்றார் என்பதற்கான ஆதாரங்களைப் பற்றி குறைந்தபட்சம் அவர்கள் ஆச்சரியம் அடைகின்றார்கள். நாம் நமது நம்பிக்கையைக் குறித்து உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க வேண்டும் (1 பேது. 3:15).*

*தேவன் இல்லையென்ற முடிவுக்கு வந்ததாக நாத்திகர்கள் கூறுகின்றார்கள். தேவன் இல்லையென்று அறிந்து கொள்வதென்பது எந்த ஒரு நபராலும் முடியாத செயல் ஆகும். அப்படிக் கூற வேண்டுமானால் ஒரு நபர் எல்லாமும் அறிந்தவராயிருக்க வேண்டும். மேலானவர் ஒருவர் இருக்கின்றார் என்பதை நம்புவதற்கான சில காரணங்களை இந்தப் பாடம் நமக்குத் தருகின்றது.*

## தேவன் இருக்கின்றார் என்பதை வேதாகமம் போதிக்கின்றது

வேதாகமத்தின் முதல் புத்தகமாகிய ஆதியாகமம், "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்'' என்ற மாட்சிமையான, கம்பீரமான கூற்றுடன் தொடங்குகின்றது, தொடர்ந்து அவர் இருப்பதை அது அறிவிக்கின்றது. வேதாகமத்தை நம்பிக்கையான ஒரு சாட்சியாக ஏற்றுக் கொள்ளாதவர்களிடத்தில் இந்த விவாதம் எடுபடாது என்பது உண்மையே. இருந்தாலும் நாம் - முந்திய பாடத்தில் செய்தது போலவே - வேதாகமம் தகுதியுள்ள ஒரு சாட்சியமாகும் என்பதை நிலைநாட்டும் செயலை - செய்திருந்தால், அது கொடுக்கும் சாட்சியம் மதிப்புள்ளதாகி யிருக்கும். நமது முந்திய பாடத்தில் நாம் வேதாகமத்தை நம்புவதற்கான காரணங்களைக் கொடுத்தோம். வேதாகமம் இயற்கைக்கு மேம்பட்ட ஒரு புத்தகம் என்பதற்கும், வெளிப்படுத்துதலால் மட்டுமே அறியக் கூடிய உண்மைகளை அது வெளிப்படுத்தியுள்ளது என்பதற்கும் ஆதாரம் அளிக்கப்பட்டது. வேதாகமமானது இயற்கைக்கு மேம்பட்ட புத்தகம் என்பதையும், சரிபார்க்கக் கூடிய எல்லா வழிகளிலும் அது சரி பார்க்கப் பட்டது என்பதையும் நாம் நிலை நாட்டியுள்ளதால், ஐம்புலன்களால் உணர

*முடியாத விஷயங்களில் வேதாகமம் கூறும் சாட்சியத்தை நாம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும். ஏனென்றால், வேதாகமமானது ஒரு சாட்சியாயிருக்கக் கூடிய தனது வல்லமையை நிரூபித்துள்ளது, தேவன் இருக்கின்றார் என்று அது அறிவிக்கையில், உண்மையைக் கூறுகின்ற தென்றே நான் நம்புகின்றேன். தேவன் இருக்கின்றார் என்பதை நான் விசுவாசிக்கின்றேன்.*

*உறுதிப்பாடுள்ள சாட்சியம் ஏராளமாய் உள்ளது. இப்பாடத்தின் எஞ்சியுள்ள பகுதியானது தேவன் இருக்கின்றார் என்பதற்கு வேதாகமத்தின் புறம்பே உள்ள ஆதாரங்களை எடுத்துத் தரும்.*

## மேலானவர் ஒருவர் இருக்கின்றார் என்பதற்கு இயற்கையே சாட்சியளிக்கின்றது.

*தேவனுடைய, ‘‘காணப்படாதவைகளாகிய அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப் பட்டிருக்கிறவைகளினாலே, உலகமுண்டானது முதற்கொண்டு, தெளிவாய்க் காணப்படும் ...” (ரோமர் 1:20). சங்கீதக்காரர், “வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது, ஆகாய விரிவு அவருடைய கரங்களின் கிரியையை அறிவிக்கின்றது” என்று கூறினார் (சங். 19:1); மற்றும் அவர், “உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும் போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்” (சங். 8:3, 4) என்றும் கூறினார். நீண்ட காலத்துக்கு முன்பு தாவீது செய்ததைப் போலவே இன்று நாமும் அற்புதமான இந்த அண்டத்தை ஆராய்ச்சி செய்ய முடியும். உண்மையில் பார்க்கப் போனால், தாவீதின் காலத்தில் இருந்த மனிதர்களிடத்தில் இருந்ததைப் பார்க்கிலும் இன்றைய நாட்களில் உள்ள மனிதனிடத்தில் வானத்தை ஆராயும் வசதி வாய்ப்புகள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பும் தேவன் இருக்கின்றார் என்ற கருத்தை இன்னும் அதிகமாய்க் கனப்படுத்துவதாகவே இருக்கின்றது.*

*இந்த அண்டத்தின் அளவிடக் கூடாத தன்மையானது நமது சிந்தனையை வசீகரிப்பதாயிருக்க வேண்டும். நாம் வாழ்கின்ற இப்பூமி யானது மிகவும் பிரம்மாண்டமான பொருளாகும், இருந்தாலும், சூரியனோடு ஒப்பிடுகையில் இது ஒரு சிறிய புள்ளியாகவே கருதப் படுகின்றது. சூரியனைப் பத்து இலட்சம் துண்டுகளாக்கினோமென்றால், அவை ஒவ்வொன்றுமே இப்பூமியின் அளவை விடப் மிகப் பெரியதாக இருக்கும். சூரிய வெளிச்சம் மற்றும் வெப்பம் ஆகியவற்றில் இரண்டு இலட்சம் கோடியில் ஒரு பங்கைத்தான் நாம் பெறுகின்றோம்.*

*பூமியின் சுற்றளவு ஏறக்குறைய 25,000 மைல்கள் ஆகும். இதைப் போல நான்காயிரம் மடங்கு அதிக தூரத்தில் சூரியன் உள்ளது, இது ஏறக்குறைய ஒன்பது கோடியே இருபது லட்சம் மைல்கள் ஆகும். நெப்ட்யூன் கிரகமானது 2 1/2 லட்சம் கோடி மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது,*

*அல்லது இது பூமி சூரியனிலிருந்து உள்ள தூரத்தைக் காட்டிலும் முப்பது மடங்கு அதிகமான தூரத்தில் இருக்கின்றது. வானங்களில் உள்ளவைகளில் மிகப் பிரகாசமான நட்சத்திரமான சிரியஸ் என்பது 51 லட்சம் கோடி கோடி மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது. பிரகாசத்தில் மூன்றாம் இடம் வகிக்கும் வானத்து நட்சத்திரமான ஆல்பா சென்தெளரி என்பது இருபது லட்சம் கோடி கோடி மைல்களுக்கு அப்பால் அல்லது சூரியனை விட 2 லட்சத்து முப்பதினாயிரம் மடங்கு அதிக தூரத்தில் இருக்கின்றது. வான மண்டலத்தில் உள்ள பல பொருட்கள் "ஒளி ஆண்டுகள்" (ஒரு ஆண்டில் ஒளி பயணம் செய்யும் தூரம்) என்ற கணக்கீட்டில் அளக்கப்படுமளவு மிக தூரத்தில் இருக்கின்றன. (ஒரு ஒளியாண்டு என்பது சுமார் ஆறு லட்சம் கோடி மைல்கள் ஆகும்). அவைகளில் சில ஆயிரக்கணக்கான ஒளி ஆண்டுகள் தூரத்தில் இருக்கின்றன. அதாவது அவைகளில் இருந்து வருகின்ற வெளிச்சமானது வினாடிக்கு 186,000 மைல்கள் வேகத்தில் ஆயிரக்கணக்கான வருடங்கள் பயணம் செய்து நம்மை அடைய வேண்டியதாய் இருக்கின்றது. வானவியல் அறிஞர்களின் கூற்றுப்படி நமது சூரிய மண்டலம் - சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், கிரகங்கள், இயற்கைத் துணைக் கிரகங்கள் போன்றவை கொண்ட மண்டலம் - ஒன்று மட்டும் வானத்தில் இருப்பதில்லை. இதைப் போன்று இலட்சக்கணக்கான மண்டலங்கள் அவைகளுக்குரிய சூரியன் மற்றும் கிரகங்கள் ஆகியவைகளைக் கொண்டிருப்பதாகக் கூறுகின்றார்கள்.*

*நமக்குக் கூறப்பட்டுள்ள இந்த எண்ணிக்கைகள் மிகச் சிறியவைகளே, ஆனாலும் இவைகளைக் கூட நம்மால் எண்ணிப் பார்க்க முடியாத அளவுக்கு மிகப்பெரும் அளவுடன் உள்ளன. இவை வானவெளியின் அளப்பரிய அளவைப் பற்றிய சில விஷயங்களை நமக்குக் கூறுகின்றன, மனிதன் கண்டு பிடித்துள்ளவைகளை நாம் ஆழமாகச் சிந்தித்துப் பார்க்கையில் பிரமிப்படைகின்றோம்; ஆனால் நாம் இதுவரையிலும் தேவனுடைய கிரியைகளின் ஓரங்களை மட்டுமே ஆராய்ந்தறிந்துள்ளோம். இந்த அண்டத்தின் மாபெரும் தன்மை பற்றிக் கூறும்போது ஒருவர், "காய்ந்த இலைச் சருகொன்று உதிரும் போது, கானகத்தின் மகிமையானது எவ்வளவு குறையுமோ அந்த அளவுதான் இந்த உலகம் முழுவதும் புகையாகிப் போனால் இந்த அண்டத்தின் மகிமையும் குறையும்" என்று கூறினார். அதாவது காட்டிற்கும் இலைக்கும் எவ்வளவு அளவு மாறுபாடுள்ளதோ அவ்வளவு அளவு மாறுபாடு இந்தப் பூமிக்கும் இது உள்ள அண்டத்துக்கும் இருக்கின்றது.*

*அளவிட முடியாத இந்த அண்டமானது தேவன் இருக்கின்றார் என்று சத்தமிடுகின்றது. தேவனுடைய இருப்பு, வல்லமை, ஞானம் மற்றும் நற்பண்பு இவை யாவும் வான சேனைகளால் தொடர்ந்து ஒலிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவைகளின் சாட்சியானது வெறும் குறிப்பு அல்ல; அது ஒரு அறிவிப்பு ஆகும். தேவனுடைய உயர்வான தெய்வீகத் தன்மையை நோக்க வேண்டுமென்றால், நட்சத்திரங்களின் பொக்கிஷ சாலையை உற்று நோக்குங்கள். முடிவற்ற தன்மை, ஞானம் மற்றும் தெய்வீக உறுதிப்பாடு ஆகியவற்றை நீங்கள் காண வேண்டுமென்றால், நட்சத்திரங்களின் சமான*

*நிலையைக் கவனித்து, கோள்களின் இயக்கத்தில் உள்ள ஒழுங்கமைவைப் பாருங்கள். அவைகள் தங்களின் மகிமையையல்ல, தேவனுடைய மகிமையையே அறிவிக்கின்றன! புத்தி கூர்மையுள்ள, மனச்சான்றுள்ள, கட்டுப் படுத்துகின்ற, மற்றும் தலைமையேற்றுள்ள சிருஷ்டிகர் ஒருவரைப் பற்றி பதில் அளிக்க முடியாத விவாதங்களை அவைகள் அறிவிக்கின்றன. அவைகளின் சாட்சியமானது எல்லா மொழிகளிலும் அறிவிக்கப்படுகின்றன, அவைகள் அழிக்கப்படவோ அல்லது அமைதிப்படுத்தவோ முடியாத சாட்சியங்களாய் இருக்கின்றன.*

*சில பொருட்கள் இருக்கின்றன, இவைகள் ஒன்றுமில்லாமையிலிருந்து வர முடியாது. ஆகையால் ஏதோ ஒன்று எப்பொழுதுமே இருந்திருக்கின்றது. இந்த "ஏதோ ஒன்றை" வேதாகமம் தேவன் என்று அழைக்கின்றது.*

## தொடக்கம் பற்றிய வினாவுக்கு புத்தி கூர்மையான படைப்பு என்பதே தர்க்கரீதியான ஒரே விடையாகும்

*"அற்புதமான இந்த அண்டம் எப்படித் தொடங்கியது?" என்று மனிதனின் ஆய்வு மனப்பான்மையின் மூலம் கேள்வி எழுப்பப் படுகின்றது. இதற்கு இரண்டே விடைகள் மட்டுமே சாத்தியமாகும்: தற்செயலானது மற்றும் புத்தி கூர்மையுள்ள படைப்பு. இது தற்செயலாகவோ அல்லது எதிர்பாராமலோ நேரிட்டது என்பதை நாம் நம்ப முடியுமா? நாம் பேசுகின்ற இந்த அற்புதமான அளவிட முடியாத வானவெளியானது குருட்டதிர்ஷ்டமான தற்செயலால் உண்டானது என்பதை எளிதில் நம்பும் தன்மை உடையவர் யார்? ஒன்றுமில்லாமையிலிருந்து ஒன்றும் வர முடியாது. விளைவுக்கு ஒரு காரணம் அவசியம் தேவை. தற்செயலானது இந்தப் பொருள் உலகத்தை உண்டாக்கியது என்பதை நான் நம்ப முடியாது. இது புத்தி கூர்மையுள்ள ஒரு படைப்பு என்பதை நம்புவதற்கான சில காரணங்களை நாம் கவனிப்போம்.*

*முதலாவது, சரியான அளவில் பல்வேறு தனிமங்கள் இணைந்து அதனால் கணக்கற்ற வகையில் தாதுக்களும், உயிர் வாழ்க்கையும் உண்டானது என்ற கருத்தானது, சேர்ப்பவர் அல்லது ஒழுங்கு படுத்துபவர் ஒருவர் இருக்க வேண்டும் என்ற நிலைக்குப் பலமாக வாதிடுவதாக உள்ளது. அண்டத்தில் இது வரையிலும் 112 தனிமங்கள் அறியப்பட்டுள்ளன. நாம் காணும் ஒவ்வொன்றும் பல்வகையான இந்தத் தனிமங்களால் உண்டானதாகும். குறிப்பிட்ட சில தனிமங்கள் குறிப்பிட்ட விகிதத்தில் சேர்க்கப்படும்போது குறிப்பிட்ட சில பொருட்களை உண்டாக்குகின்றன. இரண்டு பங்கு ஹைடிரஜனும் ஒரு பங்கு ஆக்ஸிஜனும் சேர்ந்து தண்ணீரை உண்டாக்குகின்றன. ஒரு பங்கு சோடியமும் ஒரு பங்கு குளோரினும் இணைந்து சாதாரண உப்பை உண்டாக்குகின்றன. இதை விளக்கப் படுத்துவதற்கு ஆங்கில மொழியில் உள்ள 26 எழுத்துக்களையும் எடுத்துக் கொள்வோம். இவைகளை மாறுபட்ட பல விதங்களில் சேர்த்து*

ஆயிரக்கணக்கான வித்தியாசமான வார்த்தைகளை உருவாக்க முடியும். இவ்வார்த்தைகளை, கவிதை, உரைநடை, யுத்த அறிவிப்பு, சமாதான உடன் படிக்கை, செய்தித்தாள் கட்டுரை அல்லது இது போன்ற இலக்கியப் படைப்பு ஏதொன்றையும் தொகுக்கப் பயன்படுத்தலாம். ஆயினும், எழுத்துக்களையும், வார்த்தைகளையும் ஒழுங்கமைக்கும் புத்திக் கூர்மையில்லாமல் இதைச் செய்ய முடியாது. இந்த எழுத்துக்கள் எல்லாம் தாமாகவே ஒழுங்குமைப்பை ஏற்படுத்திக் கொண்டு ஷேக்ஸ்பியரின் நாடகம் ஆயிற்று என்று நாம் யோசித்துப் பார்க்க முடியுமா? நிச்சயமாகவே முடியாது, இருந்தாலும், பல்வகையான தனிமங்கள் யாவும் தாங்களாகவே ஒன்று கூடி தற்செயலாகவே இந்த வான்வெளி மற்றும் அண்டத்தை உண்டாக்கியது என்று கூறுவது இதற்கு ஒப்பானதேயாகும்! நிச்சயமாக இப்படி நடக்க முடியாது!

இரண்டாவது, இந்த அண்டத்தில் புத்தி கூர்மையுள்ள திட்டம் மற்றும் வடிவமைப்பை நாம் காண்கின்றோம். இயற்கையில் உள்ள சிறு பொருட்களில் கூட வடிவமைப்பு உள்ளது என்பது உறுதி. பனித்துளிகள் கூட வடிவமைப்பில் பூரணப்பட்டுள்ளன. புல்லின் இதழ் ஒவ்வொன்றும் நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட வேதியியல் ஆய்வுக் கூடமாகும். நமது சரீரங்கள் யாவும் மேலான ஒருவரால் வடிவமைக்கப்பட்ட வைகள் ஆகும். ஜாக்கிரதையாய் இவற்றைக் கவனிப்பவர்கள் யாரும், "நான் பிரமிக்கத் தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியினால்'' (சங். 139:14) என்று சங்கீதக்காரனுடன் சேர்ந்து ஆச்சரியப்படுவதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியாது. இருநூறு எலும்புகள், ஐந்நூறு தசைகள், ஆயிரம் தசை நார்கள் ஆகியவை பின்னிப் பிணைந்து நமது மனித உடலை நிலைநிறுத்துகின்றது என்பது இணைவான திட்டம் மற்றும் வடிவமைப்பிற்கு உன்னதமான உதாரணமாகும். ஆயிரக்கணக்கான நரம்புகள், இரத்த நாளங்கள், தமனிகள், ஆயிரக்கணக்கான - உடல் நலத்திற்காக ஒன்றிணைந்து செயல்படும் - சுரப்பிகள் இவை யாவும் புத்தி கூர்மையுள்ள ஒரு வடிவமைப்பைச் சித்தரிக்கின்றன. இது தற்செயலாய் ஏற்பட்டிருக்க முடியாது. மனிதனின் கண்ணுக்குள் உள்ள உறுப்புகள் மட்டுமே அநேக அறிவியல் நூல் தொகுதிகளுக்குத் தேவையான விஷயங்களைத் தருகின்றன. புத்திகூர்மையுள்ள படைப்பாளர் ஒருவரால் மட்டுமே உண்டாக்கப்பட முடியும் என்பதை கண்ணின் அமைப்பானது மிக நன்றாக வெளிப்படுத்துகின்றது. இந்த ஒரு உறுப்பைப் பற்றி மட்டுமே வாழ்நாள் முழுவதும் ஒருவர் படித்தாலும், அதைப்பற்றி அறியாதது இன்னும் ஏராளம் என்று தான் அவரால் அறிக்கை செய்ய முடியும்.

மனித உடலின் மற்ற உறுப்புக்களைப் பற்றியும் இவ்வாறே கூறலாம். உடல் உறுப்பமைவு என்பது மனிதர்களுடன் நின்று விடுவதில்லை. நம்மைச் சுற்றிலும் உள்ள திரளான உயிரினங்கள் யாவும், தேவன் இருக்கின்றார் என்பதற்கு பதில் அளிக்க முடியாத விவாதங்களைத் தருகின்றன. வானத்தில் பறக்கும் பறவைகள் அவைகளின் வாழிடத்திற்குத் தக்க உடல் அமைப்பைப் பெற்றுள்ளன. கடலில் நீந்தும் மீன் இனங்கள் தங்கள் சுற்றுச் சூழலுக்குத் தக்க உடல் அமைப்பைப் பெற்றுள்ளன. உயிரினங்கள் ஒவ்வொன்றும்,

வடிவமைப்பாளர், புத்தி கூர்மையுள்ள வடிவமைப்பாளர் ஒருவர் இருப்பதை சாட்சியிட்டுச் சத்தமிட்டுக் கூறுகின்றன.

மூன்றாவது, இந்த அண்டத்தில் நிலவுகின்ற விதிமுறையும் ஒழுங்கமைப்பும், புத்தி கூர்மையுள்ள வடிவமைப்புக்குச் சார்பாக வாதிடுகின்றன. கோள்கள் யாவும் தங்கள் வட்டப் பாதையில் ஒழுங்கான வகையில், கணக்கீட்டு முறை தவறாமல் சுற்றி வருகின்றன. பூமி தனது அச்சில் 24 மணிக்கு ஒருமுறை தவறாமல் சுற்றி வருகின்றது. அதே நேரத்தில், அது சூரியனையும் மணிக்கு 72,600 மைல்கள் வேகத்தில் சுற்றி வருகின்றது. இது எப்பொழுதும் தவறாமல் நடைபெறுகின்றது! இது ஒரு விதியின்படியே சுற்றி வருகின்றது. இப்படிப்பட்ட விதிகள் ஒவ்வொரு மண்டலத்திலும் உள்ளன. வான்பொருட்களின் கிரகணமானது மிகமிகத் துல்லியமாக கணக்கிட்டுக் கூறக் கூடிய அளவுக்கு இந்த விதிகள் நடைபெறுகின்றன. அண்டத்தின் விதியானது அமல் படுத்தப்பட்டுள்ளது! இயற்கை விதிகளைத் தனக்கு ஆபத்து நேராமல் மீற முடியாது என்பதை மனிதன் பலவித கசப்பான அனுபவங்களில் இருந்து புரிந்து கொண்டுள்ளான். ஒருவர் அதை மீறும் போது அவருக்கு இரக்கமற்ற விதத்தில் இடையூறு உண்டாகின்றது. இப்படிப்பட்ட விதியும், ஒழுங்கமைவும் தற்செயலானதல்ல. இந்த விதியை ஏற்படுத்துபவர் ஒருவர் இருக்க வேண்டும்! மேலும் இவ்விதிகளை அமுல் படுத்த வல்லமையும், திறமையும் வேண்டும். அந்த வல்லமையானது புத்திகூர்மையும் ஞானமும் உள்ளதாயிருக்க வேண்டும். அண்டத்தின் விதிகள் யாவும், மேலானவர் ஒருவர் இருப்பதைச் சாட்சியிடுகின்றன, அவரே அவைகளை உண்டாக்கி, பராமரிக்கின்றார்.

நான்காவது, வாழ்வு இருப்பது என்பது ஜீவனுள்ள தேவன் இருப்பதைப் பற்றிப் பேசுகின்றது. உயிர் வாழ்வின் தொடக்கம் என்ன? ஒரு உயிர் இன்னொரு உயிரில் இருந்தே வருகின்றது. எனவே தனக்குள்ளே இயற்கையாக ஜீவன் இருக்கின்ற ஒருவர் இருக்க வேண்டும். இதையே நான் தேவன் என்று அழைக்கின்றேன். வாழ்வு மற்றும் அதன் தொடக்கம் பற்றிய சரியான விளக்கம் அவர் மட்டுமே. வாழ்வின் அற்புதத்தைத் தேடிப் புரிந்து கொள்ளும் எவரும் கடைசியில் அவரிடத்தில்தான் வந்து சேர வேண்டும். அவருக்கு அப்பால் நாம் போக முடியாது. வாழ்வு என்பது தற்செயலாக ஏற்படுவதில்லை. அது திடீரென்று உண்டாக்கப்படுவதுமில்லை. முதல் முதலான காரணம் ஒன்று இருக்க வேண்டும்.

## முடிவுரை

தேவனுடைய கிரியைகளை நாம் ஆராய்கின்ற பொழுது, தாவீதுடன் சேர்ந்து "மனுஷனை நீர் நினைக்கிறதற்கு ... அவன் எம்மாத்திரம்?" (சங். 8:4) என்று கேட்கின்றோம். மனிதன் என்பவன் ஒரு தூசியில் வாழும் தூசியாக இருக்கின்றான், ஆனாலும் தேவன், பிரகாசிக்கும் நட்சத்திரங்கள் எல்லாவற்றைக்காட்டிலும் அவன் மேல் அதிக அக்கறையுள்ளவராய் இருக்கின்றார். ஏன்? ஏனென்றால் மனிதன் அவரது சாயலில் உண்டாக்கப்பட்டவன், ஏனென்றால் மனிதன் நித்தியமானவன். இந்த

*அண்டம் முழுவதும் பற்றியெரிகையில், உலகங்களின் சிதிலத்தின் நடுவில் மனிதன் மட்டும் உயிர் பிழைப்பான்.*

*நான் தேவனை நம்புவதால் சந்தோஷப்படுகின்றேன். தேவனை நம்பாதவர்மேல் நான் பரிதாபப்படுகின்றேன், தேவனை அறியாதவர் களுக்காக இரக்கப்படுகின்றேன். அவரைக் கண்டடைந்த மற்றும் அவரை அறிந்தவர்கள் யாவரும், தங்கள் வாழ்வின் போராட்டங்களை மேற்கொள்வதற்கு பலத்த வல்லமை அளிக்கும் ஒரே மூலம் அவரே என்பதை அறிந்து அல்லது அனுபவித்து சாட்சியிடுகின்றார்கள். அவரது கரத்தின் கிரியையாகிய வானமும் பூமியும் அழிந்து போகும் ஆனால் அவரோ என்றென்றும் இருக்கின்றார், நிலைத்திருப்பார். ''நீரோ மாறாதவராயிருக்கிறீர்; உமது ஆண்டுகள் முடிந்து போவதில்லை'' (சங். 102:27); "பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்கு முன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனா யிருக்கிறீர்" (சங். 90:2). மாற்றம் மற்றும் மாறுதல், அழிவு மற்றும் சேதம் உள்ள இந்த காலத்தில், அவருடைய மாறாத கரத்தைப் பற்றிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.*